**செய்தி வெளியீடு எண் : 1784** **நாள் : 30.08.2023**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கு "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை" மூலம் நிதியுதவினை இன்று வழங்கினார்.**

2023ஆம் ஆண்டு செப்டம்பர் 4ஆம் தேதி முதல் செப்டம்பர் 10ஆம் தேதி வரை லெபனான் தலைநர் பெய்ரூட்டில் நடைபெற உள்ள 5ஆவது ஆசிய டேக்வாண்டோ சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொள்வதற்காக சென்னையைச் சார்ந்த திரு. லோக பிரிதீப் அவர்களுக்கு செலவினத் தொகையாக ரூ.1,75,000/- காசோலையையும், மலேசியாவில் நடைபெற்ற பன்னாட்டு அளவிலான சிலம்பப் போட்டியில் கலந்து கொண்டதற்காக சென்னையைச் சார்ந்த திரு.தீரஜ் அவர்களுக்கு செலவினத் தொகையாக ரூ.1,00,000/- காசோலையையும் "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின்" சார்பில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (30.08.2023) முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் தமிழ்நாட்டில் திறமையான வீரர்களை உருவாக்கி, அவர்களை சர்வதேச அளவில் ஊக்குவிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"க்கு லார்சன் & டூப்ரோ (Larsen & Toubro) நிறுவனத்தின் சார்பாக ரூ.1 கோடிக்கான காசோலையை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களிடம் லார்சன் & டூப்ரோ நிர்வாகிகள் இன்று வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு.ஜெ.மேகநாதரெட்டி, இ.ஆப., அவர்கள், சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in